ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2457/07 - 2025 ඔක්තෝබර් මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.10.09

2457/07 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: தி/காணி/எல்2/ சுவீVI/163.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தில் மாத்தறை மாவட்டத்தில் திஹாகொட பிரதேச செயலாளர் பிரிவில், இல.335சி - கப்புதூவ கிழக்கு கிராம அலுவலர் பிரிவில், கப்புதூவ கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் மாத்தறை மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 16.10.2024 ஆந் திகதிய ஆரம்ப வரைபட இல. கே. எம். 820131 இல் துண்டு இல. 01 மற்றும் 02 இல் விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.0050 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய இரண்டு (02) காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

1. துண்டு இல. 01
காணியின் பெயர்: கப்புதூவ வளவ்வத்தை; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0011 ஹெக்டயார்.

2. துண்டு இல. 02
காணியின் பெயர்: கப்புதூவ வளவ்வத்தை; விபரம்: வீதி (பிரதேச சபை); உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0039 ஹெக்டயார்.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு திஹாகொட பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டி. எச். யூ. சந்தமாலி,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
திஹாகொட.

பிரதேச செயலகம்,
திஹாகொட,

EOG 10 - 0082